

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் சீதாராம் யெச்சூரி அவர்கள்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சீதாராம் யெச்சூரி அவர்கள்!

## இந்தியாவின் பன்முகத்தன்மையை தீவிரமாகப் பின்பற்றியவர்!

# சீதாராம் யெச்சூரி மறைவு: நாட்டிற்கு மாபெரும் இழப்பு!

## சோனியாகாந்தி – தலைவர்கள் இரங்கல்!

**புதுடெல்லி, செப் 14 –**

**சீதாராம் யெச்சூரியின் மறைவு நாட்டிற்கு மாபெரும் இழப்பு என்று அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**

பிரதமர் நரேந்திர மோடி, வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், இடதுசாரிகளின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தவர் சீதாராம் யெச்சூரி என்று புகழாரம் சூட்டியுள்ளார். அரசியல் கட்சிகளுடன் எப்போதும், நட்புடன் இணைந்திருப்பவர் யெச்சூரி என்றும், மிக சிறந்த நாடாளுமன்றவாதி என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

**சோனியா காந்தி!**

நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத்தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், கடந்த 2004 - 2008 ஆம் ஆண்டு காலகட்டத்தில், சீதாராம் யெச்சூரியுடன் நட்பு தொடர்ந்து தற்போது வரை நீடித்ததாக கூறியுள்ளார். மத சார்பின்மை மற்றும் இந்தியாவின் பன்முகத்தன்மையை தீவிரமாக பின்பற்றியவர் என்றும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி உருவானதில் யெச்சூரியின் பங்கு அளப்பரியது என, சோனியா காந்தி புகழாரம் சூட்டியுள்ளார்.

**ராகுல்காந்தி!**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி மறைவுக்கு மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து சமூகவலைத்தளத்தில், பதிவிட்டுள்ள ராகுல்காந்தி, இந்தியா என்ற கருத்தியலின் பாதுகாவலராகவும் நாட்டை முழுமையாக புரிந்து கொண்டவராகவும் திகழ்ந்தவர் யெச்சூரி என புகழாரம் சூட்டியுள்ளார். பல பிரச்சனைகள் பற்றி யெச்சூரியுடன் நீண்ட நேரம் விவாதித்ததை நினைவு கூர்ந்த ராகுல்காந்தி, அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளார்.

**மம்தா பானர்ஜி!**

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராக செயல்பட்ட, சீதாராம் யெச்சூரியின் மறைவு தேசிய அரசியலுக்கு மாபெரும் இழப்பு என இரங்கல் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஜெய்ராம் ரமேஷ், சீதாராம் யெச்சூரி மிக சிறந்த மனிதர், சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் அவரது மறைவு சோகத்தை ஏற்படுத்துவதாக கூறியுள்ளார்.

**இரா.முத்தரசன்!**

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்)யின் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி (72) இன்று (12.09.2024) டெல்லி மருத்துவ மனையில் காலமானார் என்ற துயரச் செய்தி பேரிடியாக வந்தது.

ஆந்திர மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில் பொறியாளராகவும், அரசுப் பணியாளாகவும் பணியாற்றி, சென்னையில் வசித்து வந்த பெற்றோர்களுக்கு தோழர் சீதாராம் யெச்சூரி 1952 ஆம் ஆண்டு பிறந்தவர். ஐதராபாத்தில் பள்ளிக் கல்வியை முடித்து, புது டெல்லியில் மத்திய பாடத்திட்ட வகுப்பில் பயின்று அகில இந்திய அளவில் முதல் மாணவராக தேர்வு பெற்றவர். இவர் தொடர்ந்து இளங்கலை, முதுகலை பட்டமும் முடித்து, ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் ஆய்வு கல்வி பயின்றார். 1974 ஆம் ஆண்டில் இந்திய மாணவர் சங்கத்தில் இணைந்து, தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினராக இணைத்துக் கொண்டவர். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உயர் தலைமை அமைப்பான அரசியல் தலைமைக் குழுவிற்கு 1992 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு பொதுச் செயலாளர் பொறுப்புக்கு தேர்வு செய்து, பணியாற்றி வந்தார்.

கட்சியின் ஆரம்ப காலத் தலைவர்களோடு பழகி, பணியாற்றும் வாய்ப்புப் பெற்றவர். 2005 ஆம் ஆண்டில் மேற்கு வங்க சட்டப் பேரவையில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக பணியாற்றியவர். இவரது மாநிலங்களவை உரை நவ தாராளமயக் கொள்கைகளின் சீரழிவையும், வகுப்புவாத சக்திகளால் ஏற்பட்டுள்ள பேராபத்து நிகழ்வுகளையும் நாட்டின் கவனத்துக்கு எடுத்துக் கூறியவர். தோழர்களுடனும், நண்பர்களுடனும் நெருங்கி பழகும் பண்பு கொண்டவர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கோவிட் 19 நோய்த்தொற்றில் மகனை பறி கொடுத்தவர்.

சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் இடதுசாரி சக்திகளும், கம்யூனிஸ்டுகளும் கடுமையான சவால்களையும் எதிர் கொண்டிருக்கும் நிகழ்காலத்தில், ஆழ்ந்த மார்க்சிய அறிவும், தத்துவத் தெளிவும், முனைப்பான செயலாற்றலும் ஒருசேரப் பெற்றுள்ள தோழர் சீதாராம் யெச்சூரியின் இழப்பு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு மட்டும் அல்லாது, ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகளுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

மாணவப் பருவத்தில் தொடங்கி, இறுதி மூச்சுவரை இடைவிடாது பணியாற்றிய தோழர் சீதாராம் யெச்சூரியின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செங்கொடி தாழ்த்தி, செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தலைவர்கள் மற்றும் தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### புதுடெல்லி ‘எய்ம்ஸ்’ மருத்துவமனைக்கு

## சீதாராம் யெச்சூரியின் உடல் தானம்!

### குடும்பத்தினர் அறிவிப்பு!

புதுடெல்லி, செப் 14 –

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த சீத்தாராம் யெச்சூரியின் உடல் புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு தானமாக அளிக்கப்படும் என்று அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

மருத்துவமாணவர்களின் ஆய்வுக்காக, யெச்சூரியின் விருப்பப்படி அவரது உடல்தானமாக வழங்கப்படுவதாகவும், இன்று மாலை பொது மக்களின் அஞ்சலிக்குப்பின் உடல் மருத்துவமனைக்கு தரப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்டு 19 ஆம் தேதி எய்ம்ஸ் மருத்துவமனையில் நுரையீரல் தொற்றுக்காக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சீத்தாரம் யெச்சூரி, 25 நாட்கள் சிகிச்சைக்கு பலனளிக்காமல் நேற்று முன்தினம் காலமானார். அவரது உடல் டெல்லி மருத்துவமனைக்கு தானமாக வழங்கப்பட உள்ளதாக மருத்துவமனை சார்பில் பேராசிரியர் டாக்டர் ரமா தாடா தெரிவித்துள்ளார்.

## இந்திய அரசியலில் மிக உயர்ந்த தலைவர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, செப். 14 –**

**“இந்திய அரசியலில் மிக உயர்ந்த தலைவராக விளங்கியவர் சீதாராம் யெச்சூரி அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வருமாறு:**



இடதுசாரி இயக்கத்தின் முதுபெரும் தலைவரும், இந்திய அரசியலில் மிக உயர்ந்த தலைவருமான தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியும், துயரும் அடைந்தேன்.

தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் அஞ்சாநெஞ்சினராக மிள இளம் வயதில் இருந்தே நியாயத்துக்காகப் போராடும் தலைவராக இருந்தார். மாணவத் தலைவராகத் துணிச்சலுடன் நெருக்கடி நிலையை அவர் எதிர்த்து நின்றதே இதற்குச் சான்றாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் நலன், மதச்சார்பின்மை, சமூகநீதி, சமத்துவம் மற்றும் முற்போக்குக் கருத்தியல்கள் மீது அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பினால் வார்க்கப்பட்ட அவரது புகழ்வாய்ந்த அரசியல் வாழ்க்கை அடுத்து வரும் பல தலைமுறைகளைத் தொடர்ந்து ஊக்குவிக்கும்.

அவருடனான கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்றும் என் நெஞ்சுக்கு நெருக்க மானதாக நிலைத்து நிற்கும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் எனது இதயபூர்வமான இரங்கலை இக்கடினமான வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

*செவ்வணக்கம் தோழரே!*

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

**இறுதி ஊர்வலத்தில் டி.ஆர்.பாலு பங்கேற்பு!**

மேலும், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

### சீதாராம் யெச்சூரி மறைவு!

## நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பு!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல்!

சென்னை, செப். 14 –

‘மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி மறைவு நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பாகும்’ என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி மறைவு பற்றி தூத்துக்குடி விமான நிலையத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாட்டிலே இருக்கக்கூடிய மிக முக்கியமான தலைவர்களில் ஒருவரான சீதாராம் யெச்சூரி அவர்களுடைய மறைவு என்பது இந்த நாட்டிற்கு மிகப் பெரிய இழப்பு. என்றுமே தன்னுடைய கொள்கைகளிலிருந்து மாறாமல், அதே நேரத்தில் ஒரு அறிவார்ந்த விவாதங்களில், யாரும் மறுக்க முடியாத விவாதங்களை, எந்த காழ்ப்புணர்வும் இல்லாத விவாதங்களை முன் வைக்கக் கூடிய மிக முக்கியமான ஒரு தலைவர்.

இன்று அவர் மறைவு என்பது இந்த நாட்டிற்கும் பெரும் இழப்பாகும். மேலும்,தனிப்பட்ட முறையில் அவர்களுடன் பணியாற்றக்கூடிய பல்வேறு வாய்ப்புகள் எனக்குக் கிடைத்திருக்கிறது. இளைஞர்களுக்கு எப்போதும் உத்வேகம் தரக் கூடிய ஒரு தலைவர். அவரை இழந்திருப்பது, எனக்குத் தனிப்பட்ட முறையிலும் மிகப்பெரிய இழப்பாகக் கருதுகிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.

### ஒரு வாரத்திற்கு மார்க்சிஸ்ட் கொடி அரைக் கம்பத்தில் பறக்கும்!

## சீதாராம் யெச்சூரிக்கு மார்க்சிஸ்ட் அஞ்சலி!

### கே.பாலகிருஷ்ணன் இரங்கல் செய்தி!

*சென்னை, செப் 13-*

*“மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி மறைவுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது. கட்சி கொடியினை ஒருவார காலத்துக்கு அரைக் கம்பத்தில் பறக்க விட்டு மரியாதை செலுத்துமாறும், மூன்று நாட்களுக்கு கட்சி நிகழ்ச்சிகளை ரத்து செய்யுமாறும் கட்சி அணிகளை மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது,” என்று அக்கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.*

*இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர், செங்கொடி இயக்கத்தின் மகத்தான தலைவர் தோழர் சீதாராம் யெச்சூரி தனது 72 வது வயதில் காலமானார். சென்னையில் 1952ம் ஆண்டு பிறந்தவர். சிறிது காலமாக நுரையீரல் பாதிப்புக்காக புது டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று (செப்.12) மாலை 3.03 மணிக்கு காலமானார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உயரிய தலைவராகவும், இடதுசாரி இயக்கத்தின் தனித்திறன் படைத்த தலைவராகவும் உலகறிந்த மார்க்சிய தத்துவ வாதியாகவும் விளங்கினார்.*

*ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர், அதன் தொடர்ச்சியாக இந்திய மாணவர் சங்கத்தை பல ஆண்டுகள் வழிநடத்தி அகில இந்திய அளவில் சக்தி மிக்க அமைப்பாக மாற்றியதில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு. 1975ம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்ட தோழர் சீதாராம் யெச்சூரி தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக அவசர நிலை காலத்தில் கைது செய்யப்பட்டவர். 1985ம் ஆண்டு முதல் மத்தியக்குழு உறுப்பினராகவும், 1992ம் ஆண்டு முதல் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராகவும், 2015 முதல் பொதுச் செயலாளராகவும் செயலாற்றியவர்.*

*பல உலக நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களோடு நெருக்கமாக பழகியவர். கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநாடுகளில் கலந்து கொண்டு இன்றைய சூழ்நிலையில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னுள்ள கடமைகளை அழுத்தமாக வலியுறுத்தியவர். கட்சியின் அரசியல் நிலைபாடுகளை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும் கடந்த 30 ஆண்டு காலமாக தனது முழு பங்களிப்பையும் செய்தவர் தோழர் சீதாராம் யெச்சூரி. குறிப்பாக, தத்துவார்த்த தளத்திலும், மதச்சார்பற்ற பன்முகத் தன்மை கொண்ட கூட்டாட்சி இந்தியாவை பாதுகாக்க வேண்டும் என்பதிலும் முனைப்பு காட்டியவர். இண்டியா கூட்டணியை உருவாக்குவதில் அவருடைய பங்களிப்பு மகத்தானது.*

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான பீப்பிள்ஸ் டெமாக்கரசின் ஆசிரியராக செயலாற்றியுள்ளார். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், இந்துத்துவாவை எதிர்த்த போராட்டத்தில் கூடுதலான பங்களிப்பு செய்தவர். இந்து ராஷ்டிரம் என்பது என்ன?, மதவெறியும், மதச்சார்பின்மையும் ஆகிய புத்தகங்கள் முக்கியமான பங்களிப்புகளாகும். இரண்டு முறை மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர். மிகச்சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராக திகழ்ந்தார். ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கங்களை உருவாக்கும் முயற்சியில் முக்கிய பங்களிப்பு செய்தவர்.*

*தனது பல்வேறு பங்களிப்புகள் மூலம் பலதுறையினரோடும் உறவுகளை வளர்த்துக் கொண்டவர். தமிழகத்தில் பிறந்தவர் என்பதோடு தமிழகத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை வழிநடத்துவதில் பல்வேறு தருணங்களில் உதவி செய்தவர். தமிழகத்தில் நடைபெற்ற பல தேர்தல் பிரச்சாரங்களிலும் கலந்து கொண்டு பங்காற்றியவர். கட்சியின் மாநில மாநாடுகள், பல்வேறு அரசியல் சிறப்பு மாநாடுகளில் பங்கு கொண்டு உரையாற்றியவர். தோழர் சீதாராம் யெச்சூரியின் இழப்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இடதுசாரி இயக்கங்களுக்கும், மதச்சார்பற்ற இயக்கங்களுக்கும் மாபெரும் பேரிழப்பாகும். இந்தியா ஒரு நெருக்கடியான காலக் கட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் காலத்தில் இந்த இழப்பு இந்தியாவின் ஜனநாயக பன்மைத்துவத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்துக்கு பேரிழப்பாகும்.*

*செங்கொடியின் மகத்தான புதல்வர் தோழர் சீதாராம் யெச்சூரிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது. கட்சி கொடியினை ஒருவார காலத்துக்கு அரைக்கம்பத்தில் பறக்க விட்டு மரியாதை செலுத்துமாறும், மூன்று நாட்களுக்கு கட்சி நிகழ்ச்சிகளை ரத்து செய்யுமாறும் கட்சி அணிகளை மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது. தோழர் சீதாராம் யெச்சூரியின் உடல் பொதுமக்கள் பார்வைக்காக செப்.14 அன்று காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை புதுடெல்லியில் கட்சியின் மத்தியக்குழு அலுவலகத்தில் வைக்கப்படும். மாலை 3 மணிக்குமேல் அவர் விருப்பத்தின் அடிப்படையில அவரது உடல் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு, மருத்துவ ஆராய்ச்சிக்காக ஒப்படைக்கப்படும்,” என்று அதில் தெரிவித்துள்ளார்.*